## பேலியகொட மத்திய மீன் சந்தைக் கட்டிடத் தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு - 2016

---

பேலியகொட மத்திய மீன் சந்தைக் கட்டிடத் தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, நிகர சொத்து மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்புகளை உள்ளடக்கிய 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2010 யூன் 03 ஆந் திகதிய அமப/10/0958/438/001 இலக்க அமைச்சரவை அங்கீகாரத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வழங்குவது எனது பொறுப்பாகும்.

### 1.4 முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பினை தாபித்தல்

கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சரினால் 2010 மே 14 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத் தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பினை அமைப்பதற்கான அமைச்சரவைக் குறிப்பிற்கு 2010 யூன் 03 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அத்தீர்மானத்தின் பிரகாரம் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு அமைக்கப்பட்ட போதிலும் 2016 டிசெம்பர் 31 வரையிலும் நியதிச்சட்ட நிறுவனமாக அதனைச் சட்டபூர்வமாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பெறுபேறாக நிதிநிலமைக்கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்களும் மூலாதாரங்களுக்குரிய எந்தவொரு சீராக்கங்களுக்குமான அவசியம் இருந்ததா என்பதை நான் தீர்மானிக்க முடியாதுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராய மறுப்பு

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதியதும் உசிதமானதுமான கணக்காய்வுச் சான்றை என்னால் பெற முடியாதுள்ளது. அதன் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

நியமத்தின் 18 ஆம் பந்தியின் பிரகாரம் காலப்பகுதியின் போதிலான காசுப் பாய்ச்சல் கூற்றானது செயற்பாடு, முதலீடுகள், நிதிச் செயற்பாடுகள் என வகைப்படுத்தப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ள போதும், 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 57 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பவற்றினது மொத்தக் கிரயத்துடன் ஒப்பிடுமிடத்து ஒவ்வொரு பொருளும் வெவ்வேறாகத் தேய்மானமிடப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், ரூபா 38,598,438 பெறுமதியான சுத்திகரிப்பு இயந்திர கூடத்தினதும் ஐஸ் உற்பத்தி சாலையினதும் இயந்திரங்களும் கட்டிடங்களும், இயந்திரங்களும் கட்டிடங்களுமாக வெவ்வேறாக இனங்காணப்படாது இயந்திர சாதனங்கள் எனக் கருதப்பட்டு ஒட்டு மொத்தக் கிரயத்தில் 5 சதவீதம் தேய்மானமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், இயந்திரங்களும் கட்டிடங்களும் வெவ்வேறாக இனங்காணப்படாது ஒட்டு மொத்த ஐஸ் இயந்திர கூடமும் கட்டிடமாகக் கருதப்பட்டு 3 சதவீதம் தேய்மானமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நம்பிக்கைப் பொறுப்பினது தேய்மானக் கொள்கையின் பிரகாரம் குறித்த தேய்மான விகிதத்தில் தேய்மானம் மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், கணனித் துணைப் பாகங்களும் டிரீட்மன்ட் பிளான்டும் (TREATMENT PLANT) ஆகிய இரு சொத்துக்களுக்கும் அதற்குக் குறைவாகத் தேய்மானம் மேற்கொள்ளப்பட்டமையால் ரூபா 64,658 கூட்டுத் தொகையால் தேய்மானச் செலவின நிதியேற்பாடு குறைந்தும் அதேயளவு தொகையால் சொத்துக்களது பெறுமதி அதிகரித்தும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தால் பயன்படுத்தப்படும் நம்பிக்கைப் பொறுப்புக்குச் சொந்தமான ஐஸ் இயந்திர கூடம் மற்றும் 2 விற்பனைக் கூடங்கள் என்பவற்றிலிருந்து 2016 ஆம் ஆண்டிற்கெனப் பெற வேண்டிய வாடகை வருமானமாகிய ரூபா 8,460,000 கணக்கிலிடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆண்டிற்கான காசுப்பாயச்சல் கூற்றில் இனங்காணப்படாத வித்தியாசமாக ரூபா 163,797 மீதியானது சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2015 ஆம் ஆண்டின்போது ஐஸ் உற்பத்தி தொழிற்சாலையில் பழுதுபார்த்தலுக்கெனச் செலவிடப்பட்ட ரூபா 2,656,080 மூலதனமாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது 2015 ஆம் ஆண்டின்போது வருமானச் செலவினத்தின் கீழ் அதனைக் கணக்கிலிட்டதை மீளாய்வாண்டிலேனும் திருத்தஞ் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான காசேட்டின் பிரகாரம் காசு மீதி ரூபா 27,987,097 ஆகியபோதும், அத்தினத்தில் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்றின் பிரகாரம் அம்மீதி ரூபா 28,005,997 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 18,900 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் ரூபா 5,182,315 கடன் கொடுத்தோர் மற்றும் ஏனைய பொறுப்புகள் என்பன அவற்றுடன் தொடர்புடைய உப பதிவேட்டின் பிரகாரம் ரூபா 5,042,455 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 139,860 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றில் கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறுவனவுகளின் கீழ் காட்டப்பட்ட ரூபா 190,737 பெறுமதியான நீர்க் குழாய் கையிருப்பு, வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் மற்றும் கையிருப்புப் பேரேடு என்பவற்றின் பிரகாரம் உறுதி செய்யப்பட்டிராததுடன், நேரடிச் சரி பிழை பார்த்தலின் போதும் அவ்வாறான கையிருப்பு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) வர்த்தகக் கூட்டுத் தொகுதியின் வளாகத்தில் உள்ள வாகனப் பிரிவின் வருமானத்தைச் சேகரிக்கும் நடவடிக்கை தனியார் கம்பனி ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களுடனான உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்தம் நிகர வருமானத்தின் 40 சதவீதம் நம்பிக்கை பொறுப்பைச் சேர வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் நம்பிக்கை பொறுப்பு பெற வேண்டியுள்ளதாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 5,499,439 வருமானத்தை உறுதி செய்வதற்குக் கம்பனியின் நிதிக்கூற்றுக்களோ அல்லது ஏனைய சான்றெதுவுமோ கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2013 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரியின் 10 ஆம் பிரிவு | 2015 ஆம் ஆண்டில் ரூபா 95 மில்லியனும் மீளாய்வாண்டில் ரூபா 91 மில்லியனும் என குத்தகை வாடகை வருமானத்தை ஈட்டியிருந்த நம்பிக்கை பொறுப்பு, பெறுமதி சேர்வரியைக் கொடுப்பனவு செய்வதற்குப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 756 மற்றும் 757 மற்றும் 2009 டிசெம்பர் 9 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2016 ஆம் ஆண்டிற்கான பொருட்கணிப்பை மேற்கொண்டு 2017 மார்ச் 22 ஆந் திகதி சமர்ப்பித்த மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் மூலம் அவதானிக்கப்பட்ட மிகைகளும் குறைவுகளும் சம்பந்தமாக மேற்கொண்ட நடவடிக்கைகள் அறிக்கையிடப்படவில்லை. |
| (இ) 1994 யூன் 14 ஆந் திகதிய பீஈடீ 95 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நம்பிக்கைப் பொறுப்பின் தலைவர், நம்பிக்கை பொறுப்புச் சபைக்குத் திறைசேரியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி, நிர்வாக ஒருங்கிணைப்பாளர் என்போருக்குத் திறைசேரியின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின்போது ரூபா 62,500 மாதாந்தப் படியாக வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நம்பிக்கைப் பொறுப்பின் நிதி விளைவுகள் ரூபா 12,728,485 பற்றாக்குறை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 31,466,989 ஆகும். இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டினது நிதி விளைவுகளில் ரூபா 18,738,504 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. விற்பனைக் கூடங்களை ஒப்படைக்கும் வருமானத்தில் ரூபா 5,500,000 அதிகரிப்பு ஏற்பட்டமை மற்றும் பாதுகாப்புச் செலவினத்தில் ரூபா 6,047,817 குறைவு ஏற்பட்டமை என்பன மேற்படி அதிகரிப்பிற்கான பிரதான காரணிகளாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது 2012 ஆம் ஆண்டின் ரூபா 863,735 பற்றாக்குறையானது 2016 ஆம் ஆண்டு வரை அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளில் ஊழியர்களது ஊதியமும் நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானமும் மீண்டும் சீராக்கல் செய்யப்படும்போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 63,908,465 ஆகவிருந்த பங்களிப்பு 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 60,440,002 ஆகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பை நிறுவுவதற்குரிய 2010 யூன் 03 ஆந் திகதிய அமப/10/0958/438/001 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்களும் கடமைகளும் பின்வருமாறு

- பேலியகொடை மத்திய மீன் சந்தைக் கட்டிடத் தொகுதியின் பூரண நிர்வாகத்தையும் முகாமைத்துவத்தையும் பொறுப்பேற்றல், அக்கட்டிடத் தொகுதியை வினைத்திறனுடன் செயற்படுத்தி முகாமைத்துவமிடல், பேணுதல் மற்றும் அதனோடிணைந்த அல்லது அனுசரனையாகவுள்ள விடயங்களில் ஈடுபடுதல்.

- மேற்படி பந்தியில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களும் பணிகளும் ஈடேற்றப்படுத்துவதற்காக வரம்புக்கு உட்படுத்தப்படாதவாறு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் மற்றும் ஏனைய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் மற்றும் ஏனைய சகல நடவடிக்கைகளையும் பொறுப்பேற்றல்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விற்பனைக் கட்டிடத் தொகுதியின் பூரண நிர்வாகம் மற்றும் அக்கட்டிடத் தொகுதியை வினைத்திறனுடன் செயற்படுத்தல் என்பன முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் பொறுப்பாகவிருந்தபோதும், நம்பிக்கைப் பொறுப்பிற்குரிய கடைகளைக் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் சம்பாதிக்கும் வருமானம், ஐஸ் கட்டிட இயந்திரகூட நிர்மாணிப்புக்கான காணியைக் குத்தகைக்கு வழங்குவதால் பெறும் வருமானம், வளாகத்தில் ஐஸ் விற்பனை செய்வதைச் சங்கத்திடம் ஒப்படைப்பதால் பெறும் வருமானம் என்பவற்றை இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் பெற்றுக் கொள்வதாக நம்பிக்கை பொறுப்பின் தலைவர் அறிவித்திருந்தார். ஆகவே, அதன் பொருட்டு மீளாய்வாண்டின்போது நம்பிக்கை பொறுப்புக்குக் கிடைக்க வேண்டிய வருமானமாகிய ரூபா 4,272,000 நம்பிக்கை பொறுப்பின் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நம்பிக்கை பொறுப்பு அமைக்கப்படுகையில் நம்பிக்கை பொறுப்பின் முகாமைத்துவத்தை 15 நம்பிக்கை பொறுப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிடும் அமைச்சரவைக் குறிப்பைச் சட்டபூர்வமான ஆவணமாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், நம்பிக்கை பொறுப்பின் அங்கத்தவராகிய சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் 2011 செப்டெம்பர் 30 முதல் நம்பிக்கை பொறுப்பினது கூட்டங்களில் கலந்து கொண்டிராததுடன், அதற்குப் பதிலாக வேறொரு அங்கத்தவரை நியமிப்பதற்கு நம்பிக்கை பொறுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவுமில்லை.

(ஆ) விற்பனைக் கட்டிடத் தொகுதி வளாகத்தில் மோட்டார் வாகன வருமானத்தைச் சேகரிக்கும் நடவடிக்கைகளை இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் மேற்கொண்டிருந்தது. கூட்டுத்தாபனம் அப்பணியைத் தனியார் கம்பனி ஒன்றிடம் ஒப்படைத்து 2011 மார்ச் 07 முதல் 10 ஆண்டுகளுக்கு அக்கம்பனியுடன் உடன்படிக்கையில் ஈடுபட்டிருந்தது. உடன்படிக்கைப் பிரகாரம் அவ்வருமானத்தில் 40 சதவீதம் கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்கு உரியதாகும். எவ்வாறாயினும், 2016 மே 17 ஆந் திகதிய முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பின் கூட்டத்தில் மோட்டார் வாகனப் பிரிவின் மூலம் நம்பிக்கை பொறுப்பு பெற வேண்டிய வருமானம் நிகர இலாபத்தில் 50 சதவீதமாகுமென உடன்படிக்கை திருத்தஞ் செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டபோதும், 2017 ஆகஸ்ட் மாதமளவிலும் அத்தீர்மானத்தின் பிரகாரம் உடன்படிக்கையில் திருத்தத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதியில் அமைக்கப்பட்டிருந்த ஐஸ் துகள் உற்பத்திக் கூடம் வருடாந்தம் ரூபா 3,900,000 குத்தகைக்கு கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்கான எழுத்து மூல உடன்படிக்கைகள் கூட்டுத்தாபனத்துடன் செய்து கொள்ளப்படவுமில்லை. மேலும், அவ்வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் நம்பிக்கை பொறுப்பு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீன் சந்தைக் கட்டிடத்தொகுதி விற்பனையாளர்களது ஐஸ் கட்டிகளுக்கான தேவையை ஈடு செய்யும் பணியை மீன் விற்பனைச் சங்கத்திடம் ஒப்படைப்பதற்கு 2015 யூலை 17 ஆந் திகதியன்று நம்பிக்கை பொறுப்புச் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீன் விற்பனைச் சங்கத்திடம் அப்பணியை ஒப்படைக்கையில் பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க கூறுவிலைகள் கோரப்பட்டிராததுடன், எழுத்து மூல உடன்படிக்கையில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவுமில்லை.

(ii) 2015 ஆகஸ்ட் 24 முதல் 3 மாதங்களுக்கு ஐஸ் வழங்கப்படும் பணி விற்பனைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், 2016 பெப்ரவரி 16 வரை அப்பணியை விற்பனைச் சங்கமே மேற்கொண்டிருந்தது. அத்தினம் முதலாக ஐஸ் வழங்கும் பணியை இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் மேற்கொண்டதாகவும், அதன் பொருட்டு நம்பிக்கைப் பொறுப்பு பணம் எதனையும் பெற்றிருக்கவில்லை எனவும் நம்பிக்கை பொறுப்பின் தலைவர் அறிவித்திருந்தார். எவ்வாறாயினும், ஐஸ் வழங்கும் பணியை இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைத்தது சம்பந்தமாக உடன்படிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) நம்பிக்கை பொறுப்புச் சபையால் 2015 யூலை 17 அன்று தீர்மானித்ததன் பிரகாரம் 2017 மார்ச் 01 ஆந் திகதிக்கு முன்னர் ஐஸ் கட்டி உற்பத்திக்கூடம் நிர்மாணிக்கப்பட்டு முடிவடைந்திருக்க வேண்டுமாயினும், 2017 ஆகஸ்ட் மாதமளவிலும் அதனை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) ஐஸ் கட்டி விற்பனைக்கான வழங்குனர்களைத் தெரிவு செய்யும் பணி விற்பனைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், விற்பனைச் சங்கத்துடனோ அல்லது ஐஸ் கட்டி விற்பனைக்கு தெரிவு செய்யப்பட்டிருந்த வியாபாரிகளுடனோ உடன்படிக்கைகளில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளை நம்பிக்கைப் பொறுப்பு மேற்கொண்டிருக்கவில்லை.

(உ) 2011 ஆம் ஆண்டில் ஆரம்பமாகிய மீன் சந்தைக் கட்டிடத் தொகுதியின் பிரதான வருமானம் ஈட்டும் வழியாகிய சொத்துக்களைக் குத்தகைக்கு வழங்குவதன் வாயிலாக உயரளவிலான வருமானத்தைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை பின்வரும் விடயங்களின் மூலம் அவதானிக்கப்பட்டது.

(i) 2016 ஆம் ஆண்டிலும் கடந்த 4 வருடங்களிலும் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் பெற்ற வருமானத்தை மீளாய்வு செய்கையில் 2012 ஆம் ஆண்டிற்கு நிகராக 2016 ஆம் ஆண்டில் வாடகை வருமானமும் ஆண்டின் போது சம்பாதித்த வாடகை வருமானமும் முறையே ரூபா 17,787,000 மற்றும் ரூபா 31,952,527 என்பவற்றால் குறைவடைந்திருந்ததுடன், பெற வேண்டிய வாடகை வருமானம் ரூபா 14,165,527 அதிகரித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ii) மத்திய மீன் சந்தைக் கட்டிடத்தொகுதியின் மொத்த விற்பனைத் தொகுதியொன்றில் உள்ள விற்பனைக் கூடத்தின் குத்தகைப் பெறுமதி ரூபா 2.1 மில்லியன் முதல் ரூபா 4.7 மில்லியன் வரையானதாக இருந்தது. குத்தகை உடன்படிக்கையினது 14 ஆம் பிரிவின்படி குத்தகைக்குப் பெறப்பட்ட விற்பனைக் கூடமோ அல்லது அதன் ஒரு பகுதியோ அடகு வைக்கப்படுதல், விற்பனை செய்யப்படுதல் அல்லது வேறு கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பரிமாற்றஞ் செய்யப்படுவதற்கோவான எதுவித உரித்தும் குத்தகைக்குப் பெற்றவருக்குக் கிடையாது என தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், விற்பனையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த விற்பனைக் கூடங்களது குத்தகைக் கால முடிவில் நம்பிக்கை பொறுப்பு அவற்றை பொறுப்பேற்று கேள்வி நடவடிக்கைகளுக்கேற்ப மீண்டும் அவற்றை மீண்டும் குத்தகைக்கு வழங்குவதற்கு நம்பிக்கை பொறுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையால் அவ்வாறான 11 விற்பனைக் கூடங்களை நடாத்திய வாடகைக் குடியிருப்பாளர்கள் அவற்றை வெளி நபர்களிடம் ஒப்படைப்பதற்கு இடமளித்து ஒரு விற்பனைக்கூடத்திலிருந்து நம்பிக்கை பொறுப்பு பெற்றிருந்த தொகை ரூபா 500,000 மாத்திரமே. அக் குத்தகைக் காலம் முடிவடைந்த விற்பனைக் கூட உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வாடகை வருமானம் ரூபா 360,000 ஆகும். அதனை அறவிடுவதற்கும் நம்பிக்கை பொறுப்பு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) நம்பிக்கை பொறுப்பு ஆரம்பிக்கப்பட்டு 5 ஆண்டுகள் கழிந்தும் பேலியகொடை மீன்சந்தைக் கட்டிடத்தொகுதி அமைந்துள்ள 7 ஏக்கர், 3 றூட், 14.9 பேர்ச்சஸ் காணியைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கையை நம்பிக்கை பொறுப்பு மேற்கொண்டிருக்கவில்லை.

(எ) கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படுவதானது மிகவும் நலிந்த நிலையில் இருந்ததுடன் 2011 முதல் 2016 வரை வழங்கப்பட்ட 33 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2016 டிசெம்பர் 31 வரை பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீன் சந்தைக் கட்டிடத்தொகுதிக்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் விண்ணப்பித்திருந்தபோதும், அவ்வதிகாரசபையின் பரிந்துரைக்கேற்ப கழிவு நீர் வெளியேற்றத்திற்கும், நிர்ணயிக்கப்பட்ட மாதிரிகளுக்கமைய விற்பனைச் சந்தைக் கட்டிடத்தொகுதியின் சுற்றாடலைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்காமையால், 2016 டிசெம்பர் மாதமளவிலும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைப் பெற முடியாதிருந்தது.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேலியகொட மத்திய மீன் சந்தைக் கட்டிடத்தொகுதி அமைந்துள்ள காணியின் உரித்தை நம்பிக்கை பொறுப்பு பெற்றிருக்கையில் ஐஸ்கட்டி இயந்திர கூடத்தை நிர்மாணிப்பதற்கு 2016 நவம்பர் 01 முதல் 10 ஆண்டுகளுக்கு மூன்றாம் நபர்களுக்கு காணியின் ஒரு பகுதியைக் குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமாக நம்பிக்கை பொறுப்பு உடன்படிக்கையில் ஈடுபட்டமை சட்டபூர்வமற்றதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) விற்பனைக் கட்டிடத்தொகுதியில் வெளியேற்றப்படும் மீன் கழிவுகளைப் பயன்படுத்தி விலங்கின உணவு மற்றும் கொம்போஸ்ட் உரத்தை உற்பத்தி செய்து விற்பனை செய்வது தனியார் கம்பனி ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான கட்டிடத்தை அவ்வளாகத்திலேயே நிர்மாணிப்பதற்கும் அதன் மூலம் மாதாந்த வாடகையை பெறுவதற்கும் 2014 ஆகஸ்ட் 20 ஆந் திகதியன்று 15 ஆண்டுகளுக்கு அமுலில் இருக்கும் பொருட்டு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீன் கழிவுகளை அகற்றுவதற்கு நம்பிக்கைப் பொறுப்பு கம்பனிக்குப் பணம் வழங்க வேண்டுமென உடன்படிக்கையில் தெரிவிக்கப்படாதிருந்தும் கம்பனிக்கு நம்பிக்கை பொறுப்பு வழங்கியிருந்த தொகை ரூபா 6,101,216 ஆகும். இது சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கலாகும்.

(இ) நம்பிக்கை பொறுப்பிடமுள்ள காணியையும் கடைகளையும் வெளி நபர்களுக்குக் குத்தகைக்கு வழங்குவதன் மூலமும் ஐஸ் விற்பனை மூலமும் நம்பிக்கைப் பொறுப்பு பெற வேண்டிய ரூபா 4,272,000 கூட்டுத் தொகையுடைய வருமானமும் நம்பிக்கை பொறுப்பின் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிராததுடன், அவ்வருமானத்தை இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் பெறுவதாகவும் நம்பிக்கை பொறுப்பின் தலைவர் அறிவித்திருந்தார்

## 4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டின்போது சிற்றுண்டிச் சாலைக்குக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,143,868 பெறுமதியான 03 குளிரூட்டிகள் பயன்படுத்தப்படாது சிற்றுண்டிச் சாலையில் இருந்தன.

(ஆ) சில்லறை வர்த்தகக் கட்டிடத்தொகுதி 128 விற்பனைக் கூடங்களைக் கொண்டிருந்தது. இதில் 64 விற்பனைக் கூடங்கள் 2011, 2012 ஆம் ஆண்டுகளின்போது ரூபா 9,625,540 செலவில் மொத்த விற்பனைக் கூடங்களாக மாற்றஞ்செய்யப்பட்டிருந்த போதும், கணக்காய்வுத் தினமான 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் 48 மொத்த விற்பனைக் கூடங்கள் மற்றும் 12 சில்லறை விற்பனைக் கூடங்கள் என்பவற்றை வியாபார நடவடிக்கைகளுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 4.5 பொருட் கொள்வனவு நடைமுறைகள்

2006 தேசிய பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2 இற்கமைய கூறு விலைகளைக் கோருவதன் மூலமே வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளாது சுற்றாடலைச் சுத்திகரிப்பதற்கு நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. அந் நிறுவனத்துடனான உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்தம் ரூபா 1,250,000 வீதப்படி ஆண்டொன்றிற்கு ரூபா 15,000,000 கொடுப்பனவு செய்யப்பட வேண்டியபோதும், அதற்குப் புறம்பாக மாதாந்தம் ரூபா 330,000 வீதப்படி 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 3,960,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

மீன் சந்தை கட்டிடத்தொகுதிக்கென அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரது எண்ணிக்கை 43 ஆகும். இவற்றினது பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு விதிமுறைகள் தயாரிக்கப்பட்டிருந்தபோதும், அவற்றிற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தை நம்பிக்கைப் பொறுப்பு தயாரித்திருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 டிசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்தப் பாதீடு 2014 ஆம் ஆண்டு தொடக்கம் தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

நம்பிக்கைப் பொறுப்பிற்கான உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு நடைபெறவில்லை.

### 5.4 பொருட் கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த பொருட் கொள்வனவுத் திட்டம் நம்பிக்கை பொறுப்பால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.5 கணக்காய்வுக் குழு

கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் வழங்காமை, உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமித்து உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்ளாமை போன்ற பின்னணியில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதன் மூலம் மாத்திரமே எதிர்பார்த்த பயனைப் பெற முடியாத நிலை உருவாகியிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அமைச்சினது செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கட்டுப்பாடு | (i) | குறித்தவாறு வங்கிக் கணக்கிணக்கம் தயாரிக்கப்படாமை. |
| | | (ii) | காசேட்டுக் குறிப்புகள் காசோலைகளது அடியிதழ் சேர் புத்தகங்களுடன் இணங்காமை |
| (ஆ) | விற்பனைக் கூடங்களைக் குத்தகைக்கு வழங்குதல். | (i) | சகல விற்பனைக் கூடங்களையும் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| | | (ii) | விற்பனைக் கூடங்களை உப குத்தகைக்கு வழங்குவதற்கு இடமளித்தமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வருமானத்தைக் கணக்கிலிடுதல் | (i) | கடை வாடகைக்கு இன்வொய்சுகளை வழங்காமை. |
| | | (ii) | வங்கி வைப்பு தேறுவதற்கு முன்னரே பற்றுச்சீட்டை வழங்கியமை. |
| | | (iii) | பெறுவனவுக்கான பற்றுச்சீட்டை வழங்காது காசேட்டில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தமை |
| (ஈ) | ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணாமை | | நம்பிக்கை பொறுப்புச் சபைக் கூட்டங்களது சகல நடவடிக்கைகளையும் அறிக்கையிடுவதற்கான அறிக்கையிடல் புத்தகம் ஒன்றைப் பேணாமை. |